**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**
**அசல் வழக்கு எண்.** 61/2022
**வாக்குமூலம்.பி.வா.சா.ஆ.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாகுல் ஹமீது | தொழில் | |
| த/பெ. | ஜலாலுதீன் | வயது | 68 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 28.10.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா வழக்கில் நான் என் மனைவிக்காக சாட்சியம் அளிக்கிறேனா அல்லது 1,2 பிரதிவாதிகளின் அதிகார முகவர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் அதிகார முகவர் என்ற முறையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்து ஆதியில் இஸ்மாயில் ராவுத்தர் மகன் ஜம்சுதீன் பெயரில் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ–3 நிலவுடைமைமேம்பாட்டுத் திட்ட பட்டாவில் வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சம்சுதீன், சையது முகமது, கலந்தர் மைதீன் ஆகிய மூவர் பெயரும் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி மூவரின் தகப்பனார் பெயர் இஸ்மாயில் ராவுத்தர் என்றால் சரிதான்.
2. தாவா சொத்து பி.வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பட்டா படியும் மேற்சொன்ன மூவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி மூவரும் சொத்துக்களை பாகம்பிரித்துக்கொண்டதாக ஆவணம் இல்லை என்றால் சரிதான். சகோதரர்கள் மலேசியா சென்றுவிட்டதால் அவர்களுக்கு உரிய பங்கு ரொக்கமாக அவர்களிடம் கொடுக்கப்பட்டது. மேற்கண்டவாறு ரொக்கமாக பங்கு கொடுத்ததற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. சம்சுதீன் பெயரில் வழக்கு சொத்துக்களுக்கு தனிப்பட்ட பட்டா ஏற்பட்டதா என்றால் இல்லை.
3. சம்சுதீனுக்கு மொத்தம் 3 பெண்கள் வாரிசுகள் இருவர் இந்தியாவில் இருக்கிறார்கள் மற்றொருவர் மலேசியாவில் இருக்கிறார். மலேசியாவில் இருக்கும் பெண்ணிற்கு தாவா சொத்தில் உரிமை உண்டா என்றால் உரிமை இல்லை. வழக்கு சொத்துக்கள் உள்ளிட்ட இஸ்மாயில் ராவுத்தருக்கு சொந்தமான சொத்துக்களை தனது மகள்களுக்கு சம்சுதீன் எழுதிவைத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. அந்த இனாம்

செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் சம்சுதீனுக்கு முழுமையான சொத்து கிடையாது என்றால் சரியல்ல.

4. சம்சுதீன் சகோதரர்கள் சையது முகமது, கலந்தர் மைதீனுக்கு சொந்தமான சொத்துக்களை மோசடி செய்ய மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் ஆவணங்களில் ஹமீதா அம்மாள் கூட்டு என்று கண்டு தான் அடங்கல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்கு பிறகு தான் அடங்கல் ஆவணங்கள் ஹமீது அம்மாள் கூட்டு என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஹமீது அம்மாள், சன்னத்பேகம் ஆகியோர் பெயரில் பட்டா இருக்கிறது என்பதை காட்டக்கூடிய ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ–6 அ பதிவேடு சையது முகமது, கலந்தர் மைதீன் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ–5 இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தான் வருவாய் ஆவணங்கள் என் மனைவி பெயரிலும் மனைவி சகோதரி பெயரிலும் ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் சம்சுதீன் எள், கடலை விவசாயம் செய்து வந்தார் என்று சொல்வது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நேரடியாக தெரியும். அரசர்குளம் கிராமம் எனக்கு பூர்வீக கிராமம் கிடையாது என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி ஹமீது அம்மாளை திருமணம் செய்ததன் மூலம் தான் எனக்கு அரசர்குளம் கிராமம் தெரியும் என்றால் சரிதான். எனக்கு 1983ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது மாமனார் 2016ஆம் ஆண்டு காலமானார். என் மாமனார் இறந்தபிறகு தான் நான் அரசர்குளம் கிராமத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல.

6. என் மாமா இறப்பதற்கு முன்னால் அரசர்குள கிராமத்தில் உள்ள எனது மாமனார் குடும்ப நிலவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கு எனது மாமனார் சம்சுதீன் வாய்மொழியாக கிரையம் கொடுத்ததாக சொல்லியிருப்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். வாய்மொழி கிரையம் ஏற்பட்ட பிறகு பத்திரம் இல்லாததால் காளிமுத்து பெயருக்கு பட்டா மாறவில்லை என்றால் சரியல்ல. அரசர்குளம் கிராமத்தில் நத்தம் செட்டில்மெண்ட் அளவை நடந்த விபரம் எனக்கு தெரியும். அரசர்குளம்கிராமத்தில் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்ட அளவை நடந்த விபரம் எனக்கு தெரியும். நத்தம் நிலஅளவையில் புஞ்சை நிலத்தில் குடியிருந்தவர்களுக்கு அளவை செய்து தனியாக பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான்.

7. மனையாக உட்பிரிவு செய்யப்பட்ட இடத்தை தவிர மீத இடத்தை ஆதி பட்டாதாரர் பெயரிலேயே வைத்து விட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு தான் வழக்கு புலஎண்ணில் வாதியின் தகப்பனாருக்கு முழுமையான பட்டா தராமல் அவர் வீடு கட்டியிருந்த இடத்திற்கு மட்டும் பட்டா கொடுத்து விட்டு எஞ்சிய இடத்திற்கு ஆதி பட்டாதரரான சம்சுதீன் மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் பட்டா வைத்து

விட்டார்கள் என்றால் சரியல்ல. சம்சுதீன் அவரது மகள்களுக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தபோது அவருக்கு வயது ஆகிவிட்டது என்றால் சரிதான். சம்சுதீன் வயது தடுமாற்றத்தின் காரணமாக வாதியின் தந்தைக்கு கிரையம் கொடுத்த சொத்தையும் சேர்த்து ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

8. வழக்கு புலஎண். சொத்துக்களை தனது மகள்களுக்கு ஹீபா ஆவணம் எழுதித்தர சம்சதீனுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் இடமும் வழக்கு சொத்துக்கும் இடையில் முக்கால் கிலோமீட்டர் தூரம் தான் இருக்கும். சம்சுதீன் மகள்களுக்கு பண்ணை நிலம் இல்லை. சம்சுதீன் மகள்களுக்கு வேறு தொழில்கள் இல்லை. சம்சுதீன் மகள்களுக்கு பண்ணை நிலமும் வேறு தொழிலும் இல்லாத நிலையில் வழக்கு சொத்தில் வேலை காரர்களை அமர்த்தியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த வேலைகாரர்கள் வழக்கு சொத்தில் ஆடு, மாடு மேய்து கடலை சாகுபடி செய்ததாக சொல்வது உண்மைக்கு முரணானது என்றால் சரியல்ல. வாதி தான் தாவா சொத்துக்களில் ஆடு, மாடு கட்டி வைக்கோல் போர் வைத்து தென்னை மரம்போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது மாமனார் காலத்தில் இருந்து வாதியின் தந்தை தாவா சொத்தை எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

9. வாதியின் தந்தை அனுபவம் செய்து வந்த காலத்தில் பிரதிவாதியின் தந்தையோ அவரது சகோதரர்களோ ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை என் சொத்து என்று கட்சி செய்த நிலையில் எதற்காக வேலி அமைக்க முயற்சிக்கப்பட்டது என்றால் வாதி ஆக்கிரமிப்பை தவிர்ப்பதற்காக வேலி அமைக்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் அளந்து அத்துக்காட்டினால் கிரையம் வாங்குவதாக சில நபர்கள் சொன்னதன் தூண்டுதலில் நான் செயல்பட்டேன் என்றால் சரியல்ல. ஒரு சொத்தை கிரையம் வாங்க கிராம நிர்வாக அலுவலரிடம் நான்கெல்லை குறித்து வந்ததன் அடிப்படையில் தான் கிரைய பத்திரம் ஏற்படுத்துவர்கள் என்றால் சரிதான்.

10. சொத்தில் பட்டா இல்லாதவர்கள் பெயரில் கிராம நிர்வாக அலுவலர் சான்று தரமாட்டார் என்றாலும் சொத்து பட்டா யார் பெயரில் இருக்கிறதோ அவர்களுக்கு தான் தருவார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கு அருகில் உள்ள சொத்துக்கள் தொடர்பான நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 1985ஆம் ஆண்டில் இருந்து வாதிகளின் தந்தையின் நேரடி அனுபவத்தில் இருந்தது என்றால் சரியல்ல. அதில் வாதிகளின்தந்தை வீடு கட்டி குடியிருந்து வந்தததை பிரதிவாதிகளோ அவரது தந்தையோ ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியின் தந்தையின் ஆக்கிரமிப்பு உரிமையை அக்கிகரிக்கும் வகையில் வாதியின் தந்தையின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் 1 ஏர்ஸ் பட்டா ஏற்பட்டுள்ளது. 1995ஆம் வருடத்தில்

இருந்து வாதி வழக்கு சொத்தில் தனது தாயாருடன் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

11. வழக்கு சொத்தில் வாதி குடியிருந்து ஆடு, மாடு மேய்த்து வருகிறார் என்றால் வாதிக்கு அருகில் வேறு இடம் இருந்தது. வழக்கு சொத்தில் தான் வாதிகளின் சகோதரிகளான செல்வமணி, மாரியம்மாள் ஆகியோர்களுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. வாதியின் தந்தையார் கட்டிய புலஎண்338/1B–யில் உள்ள கூரைவீட்டில் வாதியின் தாயார் குடியிருந்து வருகிறார் என்றாலும் அதற்கு கீழ்புரம் உள்ள புலஎண் 338/1A–யில் வாதி தனது மனைவியுடன் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. புலஎண். 338/1A–யில் வாதி வைக்கோல் போர் வைத்து மாடு கன்று கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு எந்த அறிவிப்பும் அனுப்பாமல் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் உத்தரவு வாங்கி இருக்கிறேன் என்றால் சரியல்ல.

12. வழக்கு தாக்கல் செய்தபிறகு நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் அமைப்பில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் படி தான் கொட்டகை இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வாதியின் தந்தை காலத்தில் இருந்து எதிர்பாத்திய உரிமை ஏற்பட்டு விட்டது என்றாலும் அதை மறுக்க 1,2 பிரதிவாதிகளுக்கோ எனக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. வாதியின் தந்தையின் எதிர்பாத்திய உரிமையை பிரதிவாதிகளின் தந்தை ஆட்சேபணை செய்தது கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தையின் மரணத்திற்கு பிறகு அரசர்குளம் வந்த நான் சொத்தை அபகரிக்க கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தை தடுக்க பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணையில்லை.**